**<u>O.S.No.26/2024</u>**

<u>வா.சா.1, திரு. மகாலிங்கம்</u>
நாள் : 22.09.2025 நேரம் : 11.17AM

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1)நான் பாகபிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் எனது சகோதரிகள் என்றாலும், 4 ம் பிரதிவாதி எனது சகோதரன் என்றாலும் சரிதான். எனது தாயார் பெயர் கிருஷ்ணம்மாள் என்றால் சரிதான். எனது தாயார் தற்போது உயிருடன் தான் உள்ளார் என்றால் சரிதான். எனது தாயார் 4 ம் பிரதிவாதியுடன் தான் உள்ளார் என்றால் சரியல்ல, எனது தாயார் தனியாகத்தான் உள்ளார். எனது தாயார் 4 ம் பிரதிவாதியுடன் தான் உள்ளார் என்றாலும், வழக்கிற்காக அவர் தனியாக இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2)தாவா வழக்கின் சர்வே எண். எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண். 377 கொண்டுலாவி கிராமம் ஆகும். மேற்படி ஒரு சர்வே எண்ணுக்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்குமால் எனக்கு தெரியும். வடக்கே சாலை, தெற்கே 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த சொத்து, கிழக்கே ரத்தினவேல் சொத்து, மேற்கே சாலை. தாவா சொத்து பூர்வீக சொத்து என்று எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்து பூர்வீக பாத்தியம் என்பதை நிரூபணம் கிரைய ஆவணமோ, எனது தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவோ, தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3)எனது தகப்பனார் பெயரில் கொண்டுலாவி கிராமத்தில் சர்வே எண். 327/9A என்ற சொத்திற்கு பட்டா தாக்கலாகி உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா வழக்கை நான் சர்வே எண்கள். 327/9A1 மற்றும் 327/9A2 எண்களுக்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்துகளுக்கான மூல ஆவணங்களை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மூல பத்திரம் இல்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் சிறப்பு காவல் ஆய்வாளராக திருப்பூர் , நல்லூர் காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறேன். எனது சொந்த ஊர் கொண்டுலாவி கிராமம் ஆகும்.

4)நான் எந்த வருடம் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 15.04.1997ம் ஆண்டு பணியில் சேர்ந்தேன். நான் எனது வேலை நிமித்தமாக பல மாவட்டங்களில் பணி புரிந்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் கல்லடைப்பு ஏற்பட்டு கிட்னி பிரச்சனை ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக எனது தகப்பனார் மதுரை வேலம்மாள் மருத்துவமனையிலும் வடமலையான் மருத்துவமனையிலும் சிகிக்சை பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனாரின் சிகிச்சைக்கு சுமார் 15லட்சத்திற்கு மேல் செலவாகிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5)மேற்படி மருத்துவ செலவிற்காக 2 முதல் 4 பிரதிவாதிகள் தான் செலவு செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் திருமணமான நாள் முதல் எனது தாய், தகப்பனாரின் பராமரிப்பிற்காக பணம் கொடுத்துள்ளேனா என்றால் எனது தகப்பனாரை அடிக்கடி சந்தித்து அவரது பராமரிப்பிற்காகவும், மருத்துவ செலவிற்காகவும் சுமார் 5,000 மற்றும் 10,000 கொடுத்துள்ளேன். நான் எனது தகப்பனாரின் பராமரிப்பிற்கு மேற்படி பணம் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 10.08.2023ம் தேதி மேற்படி தாவா சொத்தை எனது தகப்பனார் தான் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் மோசடியாக 2 முதல் 4

பிரதிவாதிகள் ஏற்படுத்திய கிரைய பத்திரம். எனது தகப்பனாருக்கு கையொப்பம் போட தெரியும், ஆனால் மேற்படி பத்திரத்தில் கைரேகை தான் வைக்கப்பட்டுள்ளது.

6)மேற்படி நான் கூறுவது போல மோசடி கிரைய பத்திரத்தை எதிர்த்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கைரேகை எனது தகப்பனாரின் கைரேகை இல்லை என்பதை நிரூபணம் செய்ய கைரேகை நிபுணருக்கு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் ரூ.44,000 க்கு தான் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அதிகமாக கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. 4 ம் பிரதிவாதியின் பராமரிப்பில் எனது தகப்பனார் இருந்த போதுதான் தாவா சொத்து எனது தகப்பனாரால் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

7)தாவா சொத்து வழக்கு தரப்பினர்களின் கூட்டு அனுபவத்தில் தான் இருந்தது என்பதை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எனது தகப்பனாரின் பராமரிப்பில் தான் இருந்தது. தாவா சொத்து எனது தகப்பனாரின் தனிப்பட்ட பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து. எனது தகப்பனாரின் தனிப்பட்ட பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அவர் 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரையம் செல்லகூடியது என்றால் சரியல்ல. மேற்படி நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்து எனக்கு பூர்வீக பாத்தியம் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் தற்போது பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான்.

8)2,3 பிரதிவாதிகளுக்கு எந்த வரதட்சணையும் கொடுக்காமல் தான் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தாயார் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்பதால் அவரை சேர்க்காததால் இந்த வழக்கு அவசிய கட்சிகாரரை சேர்க்காத தோஷத்தால் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

மேற்படி தாவா சொத்தை எனது தகப்பனார் கிரையம் கொடுத்தால் அதில் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.45 AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.09.22 16:22:36 +0530